(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 58 ]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2008, திசெம்பர் 08, திங்கட்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0041/ '08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2006 ஆம் ஆண்டு சனவரி 01 ஆம் திகதி முதல் இன்றுவரை மேதகு சனாதிபதி அவர்களினால் அல்லது அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் எண்ணிக்கையையும்,

(ii) இவ் ஆணைக்குழுக்களின் நோக்கம் மற்றும் அவற்றின் தற்போதைய நிலையையும்,

(iii) இன்றுவரை இவ் ஆணைக்குழுக்களை கொண்டு நடாத்துவதற்கு ஏற்பட்ட செலவை ஆணைக்குழு வாரியாகவும்,

(iv) இவ் ஆணைக்குழுக்களுக்கு தலைமை வகிக்கின்ற நபர்களது பெயர்களையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) மேற்குறிப்பிட்ட ஆணைக்குழுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால அறிக்கைகள் தொடர்பில் என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்படும்?

(இ) இன்றேல், ஏன்?

0554 / '08

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டின் மொத்த உள்நாட்டு, வெளிநாட்டுக் கடன் 1948 இல் இருந்து இற்றைவரைக்கும் வருடாந்த அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்,

(ii) மேற்கூறப்பட்டவை மீதான செலவினம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக எவ்வளவு என்பதையும்,

(iii) மொத்த கடன், அரச மொத்த வருமானத்தின் வீதமாக எவ்வளவு என்பதையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0555 / '08

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வீதிகளின் அபிவிருத்திக்காகவும் பேணுகைக்காகவும் கடந்த ஐந்து வருடங்களாக ஒதுக்கப்பட்ட பணம் எவ்வளவு என்பதையும், உண்மையில் செலவு செய்யப்பட்ட பணம் எவ்வளவு என்பதையும் வருடாந்த அடிப்படையில் அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) பேணப்பட்ட 10 முக்கிய வீதிகள் எவை என்பதையும், அதற்காக செலவு செய்யப்பட்ட பணம் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணிக்கப்படவுள்ள புதிய நெடுஞ்சாலைகள் மற்றும் அதிவேகப்பாதைகளின் பெயர்கள் எவை என்பதையும்,

(iii) அவற்றிற்கான மதிப்பிடப்பட்ட செலவு, ஆரம்பிக்கப்படும் திகதி, பூர்த்தியாக்க எதிர்பார்க்கும் திகதி என்பன யாவை என்பதையும்,

(iv) விலைமனுக் கோரியோரின் பெயர்கள் எவை என்பதையும், அவர்கள் கூறிய விலைகள் என்ன என்பதையும்,

(v) நிதியளிக்கும் மூலகங்கள் எவை என்பதையும், கடனிற்கான வட்டி வீதம் உட்பட மொத்தச் செலவினம் எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0250 / '08

4.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நெடுஞ்சாலைகள் (அமைச்சரவை அந்தஸ்தற்ற) அமைச்சருக்கு உத்தியோக பூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது அரசாங்க உடமையா என்பதையும்,

(iii) அரசாங்க உடமை இல்லையெனில், எந்த அடிப்படையில் அவ்விடுதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருப்பின், அது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திருத்தப்பட்டிருப்பின் மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி விடுதியின் பாவனைக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செலவில் தளபாடங்கள் அல்லது வேறு உபகரணங் கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0279 / '08

5.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடற்றொழில் பிரதி அமைச்சருக்கு உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங் கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது அரசாங்க உடமையா என்பதையும்,

(iii) அரசாங்க உடமை இல்லையெனில், எந்த அடிப்படையில் அவ்விடுதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருப்பின், அது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திருத்தப்பட்டிருப்பின் மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி விடுதியின் பாவனைக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செலவில் தளபாடங்கள் அல்லது வேறு உபகரணங் கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0280 / '08

6.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— சமூக சேவைகள், சமூக நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சமூக சேவைகள், சமூக நலனோம்புகை பிரதி அமைச்சருக்கு உத்தியோக பூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது அரசாங்க உடமையா என்பதையும்,

(iii) அரசாங்க உடமை இல்லையெனில், எந்த அடிப்படையில் அவ்விடுதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருப்பின், அது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திருத்தப்பட்டிருப்பின் மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி விடுதியின் பாவனைக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செலவில் தளபாடங்கள் அல்லது வேறு உபகரணங் கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0602 / '08

7.

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) 1574 ஆம் இலக்க, பஹல லப்பல கிராம உத்தியோகத்தர் பிரிவில் பெனிவெரலுவ கிராமத்தில் 2004 ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியலில் பிரதம குடியிருப்பாளர் இலக்கம் 430/76/01 இல் வசிக்கும் திரு. தென்ன கெதர உபுல் பிரியந்த ரன்வல உள்ளிட்ட குடும்ப அங்கத்தவர்கள் பிரதம குடியிருப்பாளர் இலக்கம் 430/176 இலும், பிரதம குடியிருப்பாளர் இலக்கம் 430/129 இல் வசிக்கும் திரு. அபேசிங்க முதியன்சேலாகே செனவிரத்ன உள்ளிட்ட குடும்ப அங்கத்தவர்கள் 430/243 ஆம் இலக்கத்திலும், பிரதம குடியிருப்பாளர் இலக்கம் 430/232 இல் வசிக்கும் திரு. நிபுணச்சாரி கணிதலாகே பிறேம ரஞ்சித் பிரதம குடியிருப்பாளர் இலக்கம் 430/165 இலும், பிரதம குடியிருப்பாளர் இலக்கம் 930/217 இல் வசிக்கும் திரு. ஜயசிங்க ஆரச்சிலாகே தினேஷ் பிரிய சுரங்க பிரதம குடியிருப்பாளர் இலக்கம் 430/63/01 இலும் இரட்டைப்பதிவுள்ளவர்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இதன் மூலம் ஒரே நபருக்கு இரண்டு சந்தர்ப்பங்களில் வாக்களிக்க முடியுமாயுள்ளதென்பதையும்,

(ii) இதன் காரணமாக ஒரு சில அரசியல் கட்சிகளுக்கு அல்லது வேட்பாளருக்கு ஏதேனும் அநீதி நேரிடுமென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) இது தொடர்பாக செய்யப்பட்ட முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டதா,

(ii) விசாரணையின் போது பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் அடையாளம் காணப்பட்டார்களா,

(iii) அவ்வாறு அடையாளம் காணப்பட்டிருப்பின் அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், எதிர்காலத்தில் மேற்படி பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0764 / ' 08

8.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி, கரந்தெனிய சுகாதார மருத்துவ காரியாலயத்தில் தற்போதைய ஊழியர் குழாமின் எண்ணிக்கை யாது,

(ii) அப்பிரதேச சனத்தொகையின்படி இருக்க வேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை யாது,

(iii) அதன் பிரகாரம் இருக்கவேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை ஆகியவற்றுக்கிடையிலுள்ள வித்தியாசம் வெவ்வேறாக யாது,

(iv) ஊழியர்களின் போக்குவரத்துச் செலவினங்கள் அடங்கலாக கொடுப்பனவு கள் நிலுவைகளேதுமின்றி செலுத்தப்பட்டுள்ளனவா

என்பதை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) கரந்தெனிய சுகாதார மருத்துவ அதிகாரி காரியாலயத்துக்குரிய பிரிவுகளில் அமைந்துள்ள கிராமோதய சுகாதார நிலையங்கள் எத்தனை,

(ii) அவற்றில் நீர், மின்சாரம், நிறை பார்க்கும் உபகரணங்கள் மற்றும் வருகை தரும் தாய்மார்களுக்கான ஆசன வசதிகள் முழுமையாக உள்ளனவா,

(iii) மலசலகூடங்கள் அமைக்கும்போது, இத்திட்டத்தின் கீழ் தேவைப்படும் மலசலகூட வசதிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இக்காரியாலயத்தில் வாகனவசதிகள் உள்ளனவா,

(ii) அதற்கென மாதாந்தம் வழங்கப்படும் எரிபொருளின் அளவு எவ்வளவு,

(iii) இது கடமைப் பிரயாணங்களுக்குப் போதுமானதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்ப சுகாதார ஊழியர்களுக் குரிய மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளனவா,

(ii) இன்றேல், எவ்வளவு காலத்தில் அவை வழங்கப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0765 / '08

9.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி, அம்பலங்கொட சுகாதார மருத்துவ காரியாலயத்தில் தற்போதைய ஊழியர் குழாமின் எண்ணிக்கை யாது,

(ii) அப்பிரதேச சனத்தொகையின்படி இருக்க வேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை யாது,

(iii) அதன் பிரகாரம் இருக்கவேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை ஆகியவற்றுக்கிடையிலுள்ள வித்தியாசம் வெவ்வேறாக யாது,

(iv) ஊழியர்களின் போக்குவரத்துச் செலவினங்கள் அடங்கலாக கொடுப்பனவு கள் நிலுவைகளேதுமின்றி செலுத்தப்பட்டுள்ளனவா

என்பதை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) அம்பலங்கொட சுகாதார மருத்துவ அதிகாரி காரியாலயத்துக்குரிய பிரிவு களில் அமைந்துள்ள கிரா மோதய சுகாதார நிலையங்கள் எத்தனை,

(ii) அவற்றில் நீர், மின்சாரம், நிறை பார்க்கும் உபகரணங்கள் மற்றும் வருகை தரும் தாய்மார்களுக்கான ஆசன வசதிகள் முழுமையாக உள்ளனவா,

(iii) மலசலகூடங்கள் அமைக்கும்போது, இத்திட்டத்தின் கீழ் தேவைப்படும் மலசலகூட வசதிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இக்காரியாலயத்தில் வாகனவசதிகள் உள்ளனவா,

(ii) அதற்கென மாதாந்தம் வழங்கப்படும் எரிபொருளின் அளவு எவ்வளவு,

(iii) இது கடமைப் பிரயாணங்களுக்குப் போதுமானதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்ப சுகாதார ஊழியர்களுக் குரிய மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளனவா,

(ii) இன்றேல், எவ்வளவு காலத்தில் அவை வழங்கப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0766 / ' 08

10.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி, கோனாபினுவய சுகாதார மருத்துவ காரியாலயத்தில் தற்போதைய ஊழியர் குழாமின் எண்ணிக்கை யாது,

(ii) அப்பிரதேச சனத்தொகையின்படி இருக்க வேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை யாது,

(iii) அதன் பிரகாரம் இருக்கவேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை ஆகியவற்றுக்கிடையிலுள்ள வித்தியாசம் வெவ்வேறாக யாது,

(iv) ஊழியர்களின் போக்குவரத்துச் செலவினங்கள் அடங்கலாக கொடுப்பனவு கள் நிலுவைகளேதுமின்றி செலுத்தப்பட்டுள்ளனவா

என்பதை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) கோனாபினுவய சுகாதார மருத்துவ அதிகாரி காரியாலயத்துக்குரிய பிரிவுகளில் அமைந்துள்ள கிராமோதய சுகாதார நிலையங்கள் எத்தனை,

(ii) அவற்றில் நீர், மின்சாரம், நிறை பார்க்கும் உபகரணங்கள் மற்றும் வருகை தரும் தாய்மார்களுக்கான ஆசன வசதிகள் முழுமையாக உள்ளனவா,

(iii) மலசலகூடங்கள் அமைக்கும்போது, இத்திட்டத்தின் கீழ் தேவைப்படும் மலசலகூட வசதிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இக்காரியாலயத்தில் வாகனவசதிகள் உள்ளனவா,

(ii) அதற்கென மாதாந்தம் வழங்கப்படும் எரிபொருளின் அளவு எவ்வளவு,

(iii) இது கடமைப் பிரயாணங்களுக்குப் போதுமானதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்ப சுகாதார ஊழியர்களுக் குரிய மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளனவா,

(ii) இன்றேல், எவ்வளவு காலத்தில் அவை வழங்கப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0857/08

11.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த யூலை 22 ஆம் திகதி இரவு தென்மேற்கு மற்றும் மேற்குக் கடற் பரப்பில் ஏற்பட்ட சூறாவளியின்போது உயிர் பிழைத்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட மீனவர்களின் எண்ணிக்கை எத்தனை,

(ii) இவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை,

(iii) உயிரிழந்த மீனவர்களின் குடும்பங்களுக்கு நட்ட ஈடு செலுத்தப்பட்டுள்ளதா,

(iv) ஆமெனில் அது எப்போது,

(v) நட்டஈடு யாருக்குச் செலுத்த்பட்டது,

(vi) எவ்வளவு செலுத்தப்பட்டது

என்பவற்றை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(அ) (i) கடலில் ஏற்படுகின்ற சீரற்ற காலநிலைகள் தொடர்பாக மீனவர்களை முன்கூட்டியே விழிப்பூட்டுவதற்கான முறையொன்று உள்ளதா,

(ii) மேற்படி மீனவர்களுக்கு முன்கூட்டியே அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதா

என்பதை அவர் குறிப்பிவாரா?

(இ) இன்றேல் ஏன்?

0864/08

12.

கௌரவ பேமசிறி மானகே,— நிதி,திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்தின் தற்போதைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றின் அளவு யாது,

(ii) தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியம் எப்போது தாபிக்கப்பட்டது,

(iii) இந் நிதியத்தின் முதலாவது தலைவரின் பெயர் என்ன,

(iv) இந் நிதியத்தின் தற்போதைய தலைவரின் பெயர் என்ன

என்பவற்றை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி தலைவர் தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்தில் தலைவராக நியமனம் பெறுவதற்கு முன்னர் வகித்த பதவி மற்றும் உரிய திணைக்களம் யாது என்பதை அவர் குறிப்படுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

0865/08

13.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மீனவர்கள் தமது கடமைகளில் ஈடுபடும்போது பல்வேறுபட்ட கட்டுப்பாடுகளுக்கு முகங்கொடுக்க ஆளாகியுள்ளனர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) அவ்வாறு விதிக்கப்பட்டுள்ள சட்ட வரம்புகள் யாவை என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வாறு விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் வரையறைகளின் காரணமாக மீனவர்கள் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுக்க ஆளாகியுள்ளனர் என்பதையும் ,

(ii) தேசியப் பதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய அதேவேளை மீனவர்கள் தமது தொழிலில் ஈடுபடக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

0886/ '08

14.

கௌரவ லக்ஷ்மன் நிபுனஆரச்சி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 5 ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில்கள் வழங்கப்படும் எண்ணிக்கை ஆண்டொன்றுக்கு 10,0000 ஆகுமென்பதையும்,

(ii) புலமைப் பரிசில்களுக்கான உதவு தொகைகளைப் பெறுவதற்கு குடும்பத்தின் வருடாந்த வருமான எல்லை ரூபா. 24,000/- க்குக் குறைவான மட்டத்தில் இருத்தல் வேண்டுமென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வருடாந்த வருமான எல்லை நடைமுறைச் சாத்தியமானதல்ல என்பதையும்,

(ii) ஒரு மாதத்திற்கு ரூபா 2000/- வருமானத்தில் ஒரு குடும்பத்திற்கு எவ்விதத்திலும் வாழ முடியாதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) மேற்படி வருமான எல்லையை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா,

(ii) புலமைப் பரிசில் கிடைக்கின்ற ஒரு பிள்ளைக்குக் கிடைக்கும் தொகை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) புலமைப் பரிசில்களின் எண்ணிக்கையையும் புலமைப் பரிசில் தொகையையும் அதிகரிப்பதற்கான தேவை உள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(உ) இன்றேல், ஏன்?

0887/ '08

15.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புகையிரதத் திணைக்களத்திற்கும் "இந்திய றைட்ஸ்" எனப்படுகின்ற கம்பெனிக்கும் இடையில் உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப் பட்டுள்ளதா,

(ii) ஆமெனில் எப்போது,

(iii) கைச்சாத்திட்டவர்கள் யார்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு இருதரப்பினரும் எத்தகைய இணக்கத்திற்கு வந்துள்ளார்களென்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) 2006 ஆம் ஆண்டில் இருந்து இற்றைவரை புகையிதத் திணைக்களம் வெளிநாடுகள் அல்லது நிறுவனங்களுடன் உடன்படிக்கைகளில் கைச்சாத் திட்டுள்ளதா,

(ii) ஆமெனில், அவை யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி,— இச்சட்டம் ஏற்புடையதாகின்ற ஒவ்வோர் ஆளினதும் பொறுப்பாகக்கூடிய மொத்த வரவின்மீது நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி எனவழைக்கப்பட வேண்டிய வரியொன்றை விதிப்பதற்கும் சேகரிப்பதற்கும் ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்பு பட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற் குமானதொரு சட்டமூலம்.

## பிரேரணை முன்னறிவித்தல்

2.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள் (இல.1),— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 14, மற்றும் 15 ஆம் இலக்க பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினின்றும் விலக்குப்பெறுமாக.

3.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள் (இல. 2),— 2008 நவெம்பர் மாதம் 27 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைகளினால் தடைபெறாமல் ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 முதல் 21 வரையிலான பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 7, 70(2) மற்றும் 70(3) ஆம் இலக்க நிலையியற்கட்டளைகளின் ஏற்பாடுகளினின்றும் விலக்குப்பெறுமாக.

4.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2009 சனவரி மாதம் 06 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிவரை ஒத்திவைக்கப்படுமாக.

6.

கௌரவ ரவீந்திர சமரவீர,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக,—

"பிலியந்தல தர்மசாஸ்த்ரோதய பிரிவேன் விகாரஸ்த சங்வர்தன சபாவவைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

7.

கௌரவ எட்வட் குணசேகர,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக,—

"குளோபல் ஹியுமெனிடேரியன் பவுன்டேஷனைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2009) — (ஒதுக்கப்பட்ட இருபத்திமூன்றாம் நாள்) - குழு ஆய்நிலையில் (பரிசீலனை திசெம்பர் 05 ஆம் திகதி).

*2.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— உள்நாட்டு திறைசேரிச் சட்டமூலங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரேரணை,— இதற்கு முந்திய பிரேரணை மூலம் கடன்படலுக்கு அதிகாரமளிக்கப்பட்ட தொகைக்கும் கூடுதலாக நூற்று இருபத்தைந்து பில்லியன் ரூபாவிற்கு (125,000,000,000) மேற்படாத தொகையானது இலங்கை அரசாங்க திறைசேரி உண்டியல்களை இலங்கையில் வழங்குவதன் மூலம் கடனாகப் பெறப்படலாமெனவும், அந்நோக்கத்திற்காக நிதி, திட்டமிடல் அமைச்சருக்கு (417 ஆம் அத்தியாயமான) உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் 2 (1) ஆம் பிரிவின் கீழ் தேவைப்படும் சகல அதிகாரங்களும் வழங்கப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— ( 52 ஆம் அத்தியாயம்) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 22(1) ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் கள்ளு அல்லது வேறு தானியம் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட ஏதேனும் மதுபானம் தவிர்ந்த சாராயம் மீதான மதுவரி

சம்பந்தமாக விதிக்கப்பட்டு 2008 ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதிய 1570/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.11.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 903)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— (52 ஆம் அத்தியாயம் ) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 22(1) ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் வெல்லப்பாகு (மொலாசியஸ், பனஞ் சாராயம் தென்னை மற்றும் பதனிடப்பட்ட சாராயம் மீதான வரி சம்பந்தமாக விதிக்கப்பட்டு, 2008 ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதிய 1570/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.11.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 904)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— (52 ஆம் அத்தியாயம் ) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 22(1) ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் உள்நாட்டில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுசாராயம் மீதான மதுவரி சம்பந்தமாக விதிக்கப்பட்டு, 2008 ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதிய 1570/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.11.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 905)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 4),— (52 ஆம் அத்தியாயம் ) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 22(1) ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் மாவூறற் குடிதேறல் மீதான தீர்வை சம்பந்தமாக விதிக்கப்பட்டு, 2008 ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதிய 1570/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.11.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 906)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை

கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் 31 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரால் நிச்சயிக்கப்பட்ட தொழில் முயற்சிகள் மீது விதிக்கப்பட்ட செஸ் வரியை இரத்துச் செய்தல் சம்பந்தமாக விதிக்கப்பட்டு, 2008 ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதிய 1570/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.11.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கட்டளை (இல. 1),— 1989 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2008.செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதிய 1567/03 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.11.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 1989 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2008 ஒற்றோபர் மாதம் 29 ஆந் திகதிய 1573/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.11.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— 1989 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2008 நவெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1574/08 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.11.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 4),— 2007 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்ட 1989 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க உற்பத்தி வரி சட்டத்தின் 3 (இ) ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2008 நவெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1574/09 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.11.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் அதிமேதகு சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2008 நவெம்பர் 06 ஆந் திகதிய 1574/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.12.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையிள் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*13.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இறக்குமதிகள் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதிகள் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4(3), 14 மற்றும் 20 ஆம் பிரிவுகளின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2008 நவெம்பர் 06 ஆந் திகதிய 1574/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.12.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையிள் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*14.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம் (இல.1),— 2008.12.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழான இறக்குமதிகள் தீர்வைகள் சம்பந்தமான தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2008 நவெம்பர் 06 ஆம் திகதிய 1574/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி)

(அமைச்சரவையிள் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*15.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப் பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதீ, ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதி அவர்களால் ஆக்கப்பட்டு 2008 நவெம்பர் மாதம் 07 ஆம் திகதிய 1574/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.12.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையிள் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*16.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம் (இல.12),— 2008.12.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழான ஏற்றுமதிகள் தீர்வைகள் சம்பந்தமான தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2008 நவெம்பர் 06 ஆம் திகதிய 1574/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி)

(அமைச்சரவையிள் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*17.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல 1),— 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத் துடன் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 37 ஆம் இலக்க கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம்

### 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 37

2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத் தின் இரண்டாம் அட்டவணையின் 30602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் “இலங்கைப் புகையிரதத் திணைக்கள பண்டகசாலை முற்பணக் கணக்கு” — இலங்கை புகையிரதத் திணைக்களம் என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன் :-

(i) அச்சட்டத்தின்ீ இரண்டாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப் பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை ரூபா 1,000,000,000 இலிருந்து ரூபா 680,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக் கப்பட்ட பற்றுமீதியின் உச்ச எல்லை ரூபா 3,800,000,000 இலிருந்து ரூபா 3,900,000,000 வரை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை ரூபா 400,000,000 இலிருந்து ரூபா 550,000,000 வரை.

(இக்கட்டளை 2007.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் :* மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2008.08.28.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறபட்டுள்ளது.)

*18.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 2),— 2007 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8

ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல 03 இல் குறித்துறைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வெண்டுமெனப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

**2007 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின்**

**8 ஆம் பிரிவின் கீழான 03 ஆம் இலக்கக் கட்டளை**

2007 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எமக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளை மூலம் அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் 23202 ஆம் இலக்க செயற்பாட்டு விடயம் “சிறைச்சாலைகளின் கைத்தொழில், கமத்தொழில் பொறுப்பேற்புகள் முற்பணக்' கணக்கு “– சிறைச்சாலைகள் திணைக்களம் என்பதற்கெதிராக குறித்துறைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

(i) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துறைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை ரூ. 67,000,000 இலிருந்து ரூ. 79,000,000 வரை.

(ii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் III இல் குறித்துறைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை ரூ. 68,000,000 இலிருந்து ரூ. 80,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துறைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை மிளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துறைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை மிளாய்வு செய்யப்படவில்லை.

(இக் கட்டளை 2008.12.31 ஆம் திகதிவரை செல்லுபடியானதாகும்)

ஒப்பம் மஹிந்த ராஜபக்ஷ,
நிதி திட்டமிடல் அமைச்சர்,

2008.11.04
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறபட்டுள்ளது.)

*19.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல. 1),— 2002.01.28 ஆம் திகதி அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள், அரசியலமைப்பின் பதினேழாவது சீர்திருத்தத்தின் 27 (2) ஆம் பிரிவின் கீழ் 2002.01.29 ஆந் திகதியிலிருந்து குறித்த பதவிக்கு மீள நியமிக்கப்பட்டார். அதனையடுத்து, அரசாங்க சேவையில் மேற்கொள்ளப்பட்ட சம்பளத் திருத்தங்களின் வண்ணம், தேர்தல் ஆணையாளரின் சம்பளம் 2006.11.23 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டது. எனினும், செயலாளர் பிரமாணக் குறிப்பின் கீழ் இந்தப் பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்வது தொடர்பாக குறித்த சந்தர்ப்பத்தில் தீர்மானிக்கப்படவில்லை யாதலால், தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள் மீள சேவைக்கு அமர்த்தப்பட்ட 2002.01.29 ஆம் திகதியிலிருந்து பதவி வகிக்கும் வரையான காலத்திற்குரிய சம்பள ஏற்ற பெறுமானங்களையும் சம்பளத்துடன் சேர்த்து வழங்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*20.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— *அரசியலமைப்பின் கீழான தீர்மானம்* (இல.2),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 153(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் திரு. எஸ். சுவர்ணஜோதி அவர்கள் 2008.01.04 ஆம் திகதியிலிருந்து கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்கு நியமிக்கப்பட்டதையடுத்து, கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்குரிய எஸ். எல். 4 ரூபா 47,515—12x1,425 — 64,615 சம்பள அளவுத்திட்டத்தின் 58,915 ரூபா சம்பளத்திட்டத்தில் நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. திரு. சுவர்ணஜோதி அவர்கள் பதவி வகிக்கும் காலம் வருடாந்த ஏற்றத்தை வழங்குவதற்கும் 2008.08.06 ஆம் திகதி அமைச்சரவையினால் தீர்மானிக்கப் பட்டது. ஆகையால், கணக்காய்வாளர் தலைமை அதிபதி திரு. எஸ். சுவர்ணஜோதி அவர்களுக்கு 2008.01.04 ஆந் திகதியிலிருந்து 58,915 ரூபா மாதாந்த சம்பளத்தை வழங்கவும், பதவிவகிக்கும் காலம் வரை பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றத்தை வழங்கவும் வேண்டுமென இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*21.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— *அரசியலமைப்பின் கீழான தீர்மானம்* (இல.3),— நீதிச்சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்படும் மாதாந்தப் படி, அவர்களின் மாதாந்த சம்பளத்தின் 1/3 க்குச் சமமான ஒரு படியாக இருக்க வேண்டுமெனவும், அது 2007, சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து செலுத்தப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது. நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் படிகள் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளு மன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளினால் தீர்மானிக்கப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் படியானது பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— *அரசியலமைப்பின் கீழான தீர்மானம்* (இல.1),— அரசியலமைப்பின் 54(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் ஊதியமும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது:—

| | | |
|---|---|---|
| **<u>தவிசாளர் (முழு நேர)</u>** | | |
| ஊதியம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |
| **<u>உறுப்பினர்கள்</u>** | | |
| ஊதியம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்த ஊதியம் 2007.01.01 ஆம் திகதியி லிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாள ருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய ஊதியமும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்

கப்பட்ட ஊதியமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஊதியமும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— அரசியலமைப்பின் 155அ(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் கொடுப்பனவுகளும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவில் (எரிபொருள் படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தக் கொடுப்பனவு 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் கொடுப்பனவுகளும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1994 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 2(7) ஆம் பந்தியின் பிரகாரம் அக் குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 66,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 80,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 12,000.00 மாதாந்தம் |
| மொத்தம் | | ரூ. 77,000.00 |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளமும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*25.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் பிரகாரம் தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும் படிகளும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*26.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 1991 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தின் 4(8) ஆம் பந்தியின் பிரகாரம் தாபிக்கப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உப தவிசாளரினதும் சம்பளம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உப தவிசாளர்**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 50,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 12,000.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 62,000.00 |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் ஆணைக்குழுவின் உப தவிசாளர் பதவியில் பணியாற்றியுள்ள பேராசிரியர் லால் பெரேரா அவர்களுக்கும் தற்போது அப்பதவியை வகித்துவரும் கலாநிதி ஜீ. டி. குணவர்தன அவர்களுக்கும் இச்சம்பள அதிகரிப்பு ஏற்புடையாதாக வேண்டுமெனவும், தேசிய கல்வி ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உப தவிசாளருக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும் படிகளும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*27.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (எ) ஆம் பந்தியின் கீழ் தேயிலைச் சபையால் ஆக்கப்பட்டு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு 2008, சனவரி மாதம் 10 ஆம் திகதிய 1531/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான “2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபை(தேயிலைத் தொழிற்சாலைகளின் நிர்மாணமும் தொழிற்பாடும்) குறைந்தபட்ச நியமங்கள் ஒழுங்குவிதிகள்'' அங்கீகரிக்கப்படுமாக.

*28.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*29.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப் பட்ட விடயம் (ஒற்றோபர் 03, 2006),— ''(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் இலங்கை மருத்துவப் பேரவையுடன் கலந்தாலோசனை செய்து ஆக்கப்பட்டு 2006, ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய 1458/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2006.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக'' எனப் பிரேரணை கொண்டு வரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*30.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67

மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*31.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*32.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*33.

தேசிய புடைவை மற்றும் உடுதுணி நிறுவகச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*34.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*35.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*36.

இலங்கை மின்சாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*37.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*38.

இந்திய வம்சாவழியினரான ஆட்களுக்கு பிரசாவுரிமை வழங்கல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*39.

நாடற்ற ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்கல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*40.

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*41.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*42.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*43.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*44.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*45.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

46.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

47.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

48.

ஸ்ரீ பாத கல்பவருக்ஷ் அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## தினப்பணிகள் மீதான திருத்தங்கள் பற்றிய முன்னறிவித்தல்கள்

அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2009) எனும் சட்டமூலத்திற்கு குழு ஆய்நிலையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் திருத்தங்களைத் "தினப்பணிகளுக்கான அனுபந்தம்" என்னும் தனியிதழிற் காண்க.

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.